SHANKAR IAS ACADEMY™

The Best IAS Academy In South India SINCE 2004

தமிழ்

ஜூன் - 2018

# ZERO CURRENT AFFAIRS

## TNPSC GROUP II

**0%** Effort | **100%** Results

www.tnpscthervupettgam.com

Also available @ BOOKMARK

Plot No 1742, 1st Floor, 18th Main Road, Anna Nagar West, Chennai – 600 040

**Contact : 044-43533445 | 044-45543082.**

**Centres** : Chennai - Annanagar & Adyar | Salem | Madurai | Trichy.

# ஜூன் - 2018

## தமிழ்நாடு

1) **அவ்வையார் விருது** 2018: கடந்த 30 ஆண்டுகளாக பெண்கள் முன்னேற்றத்துக்காகத் தொடர்ந்து பாடுபட்டு வரும் மதுரையைச் சேர்ந்த **திருமதி.சின்னப்பிள்ளை பெருமாள்** அவர்களுக்கு தமிழக அரசானது அவ்வையார் விருதினை வழங்கிக் கவுரவித்துள்ளது.

2) **ஃபெமினா மிஸ் இந்தியா (Femina Miss.India 2018)** : தமிழகத்தைச் சேர்ந்த அனுகீர்த்தி வாஸ் (Anukreethy Vas) என்பவர் 2018-ம் ஆண்டுக்கான மிஸ்.இந்தியா விருதினைத் தட்டிச் சென்றுள்ளார். இவ்விருதானது 2018 ஜூன் 19 அன்று வழங்கப்பட்டது. ஹரியானாவைச் சேர்ந்த மீனாட்சி சவுத்ரி (Meenakshi Choudary) என்பவர் இந்தப் போட்டியில் இரண்டாம் இடம் பெற்றார்.

3) **சாகித்ய அகாடமி விருதுகள்** 2018 :

| | | |
|---|---|---|
| ➢ **யுவ புரஸ்கார் விருது** | **சுனில் கிருஷ்ணன்** | சிறுகதை : **“அம்புப் படுக்கை”** |
| ➢ **பால சாகித்ய விருது** | **கிருங்கை சேதுபதி** | கவிதை : **“சிறகு முளைத்த யானை”** |

4) **டி.என்.பி.எஸ்.சி குரூப் - 1 வயது வரம்பு** : டி.என்.பி.எஸ்.சி (TNPSC) தேர்வு எழுதுபவர்களின் அதிகபட்ச வயது வரம்பானது ஆதி திராவிடர்/ பழங்குடியினர்/ பிற்படுத்தப்பட்டோர்/ மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் (SC/ST/BC/MBC & DNC) ஆகியோருக்கு 35-லிருந்து 37-ஆகவும் இதர பிரிவினருக்கு 30-லிருந்து 32 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. தமிழக சட்டப்பேரவையின் விதி 110-ன் கீழ் தமிழக முதல்வரால் 2018 ஜூன் 19 அன்று அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்பானது குரூப் - 1, 1 - A மற்றும் 1 - B ஆகிய தேர்வுகளுக்குப் பொருந்தும்.

5) **நெய்வேலி லிக்னைட் நிலக்கரி நிறுவனமானது (Neyveli Lignite Corporation India Limited - NLCIL)** 100 மெகா வாட் மின் உற்பத்தித்திறன் கொண்ட மூன்று சூரிய ஒளி மின் உற்பத்தித் திட்டங்களை (100 MW Solar Power Projects) தமிழகத்தில் நிறுவியுள்ளது. அவையாவன :

| | |
|---|---|
| ➢ **விருது நகர் மாவட்டம்** | • தோப்பலாக்கரை<br>• சேதுபுரம் |
| ➢ **திருநெல்வேலி மாவட்டம்** | • செல்லையா செழிய நல்லூர் |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

6) தமிழக அரசானது 'யோகா மற்றும் இயற்கை மருத்துவ ஆராய்ச்சி மையத்தினை' (Yoga and Naturopathy Research Centre) **செங்கல்பட்டில்** அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

7) தர்மபுரி மாவட்டம் **பாப்பாரப்பட்டியில் 'பாரத மாதாவுக்கு கோவில்'** ஒன்று அமைக்கப்பட உள்ளது.

8) இந்தியாவிலேயே முதன் முறையாக **புனல் மின் உற்பத்தி கண்காட்சியானது** (1st Hydro Power Production Exhibition) நீலகிரி மாவட்டம் **மஞ்சூரில்** நடைபெற்றது.

9) சென்னை பெருநகர மாநகராட்சிக்கு (Greater Chennai Corporation) GIZ என்ற **ஜெர்மானிய** நிறுவனமானது **'நகர்ப்புறப் போக்குவரத்தில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான புத்தாக்க முயற்சி'** (Transformative Urban Mobility Innovative Award) எனும் விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.

10) 'பிரதான் மந்திரி ஸ்வஸ்த்ய சுரக்ஷ யோஜனா' (PMSSY) திட்டத்தின் கீழ் மத்திய அரசானது புதிய எய்ம்ஸ் மருத்துவமனையை (அனைத்திந்திய மருத்துவ அறிவியல் நிறுவனம் - All India Institute of Medical Science) மதுரை மாவட்டத்திலுள்ள **தோப்பூர்** கிராமத்தில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

11) **உத்தமமும் (உலகத் தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம்** - International Forum for Information Technology in Tamil) **கோயம்புத்தூரில் உள்ள** 'தமிழ்நாடு வேளாண் பல்கலைகழகமும்' (Tamil Nadu Agriculture University - TNAU) இணைந்து **17வது 'உலக தமிழ் இணைய மாநாட்டினை'** (17th World Tamil Internet Conference) 2018 ஜூலை 6 முதல் 8 வரை நடத்தத் திட்டமிட்டுள்ளன. இதன் கருத்துரு : **"அறிவுசார் தமிழ் தேடுபொறிகள்"** (Intellectual Tamil Search Engines)

12) **உலகத் தமிழ் பண்பாடு மாநாட்டின்** பதின்மூன்றாவது பதிப்பினை (13th World Tamil Culture Conference) 2018 ஜூன் 16 அன்று **பெங்களூரில்** நடைபெற்றது. உலகத் தமிழ் பண்பாடு மையத்தின் தலைமையகமானது மலேசியாவில் உள்ளது.

13) தமிழக அரசானது சென்னையிலிருந்து சேலம் வரையில் 277 கி.மீ. நீளம் கொண்ட 'எட்டு வழி பசுமைச் சாலையினை' (8 Lane Green Expressway) அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

14) மத்திய இரயில்வே இணை அமைச்சரான ராஜன் கோகைன் **இரண்டு அடுக்குகள் கொண்ட உதய் விரைவு ரயிலை** (Double Decker Uday Express) **கோயம்புத்தூர் - பெங்களூர்** இடையிலான வழித் தடத்தில் 2018 ஜூன் 10 அன்று தொடங்கி வைத்தார்.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

15) **உலக சுற்றுச்சூழல் தினமான** ஜூன் 5 அன்று தமிழக அரசானது தமிழ்நாட்டில் பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவது, 2019 **ஜனவரி 1** முதல் முற்றிலுமாகத் தடை செய்யப்படும் என அறிவித்துள்ளது.

16) புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு நீதிபதிகளையும் சேர்த்து மெட்ராஸ் உயர் நீதிமன்றத்தில் உள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை 63 ஆக (தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜியையும் சேர்த்து) உயர்ந்துள்ளது. ஆனால், மொத்தமாக இருக்க வேண்டிய நீதிபதிகளின் எண்ணிக்கை 75 ஆகும்.

17) மத்திய அரசானது **"காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையத்தினையும்"** (CMA) **"காவேரி நதி நீர் ஒழுங்காற்றுக் குழுவினையும்"** (CWRC) 2018 **ஜூன் 1** அன்று உருவாக்கியது. காவேரி நதி நீர் மேலாண்மை ஆணையமானது ஒரு தலைவர் (எஸ்.மசூத் ஹுசைன்) ஒரு செயலாளர் மற்றும் எட்டு உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. எட்டு உறுப்பினர்களுள் இருவர் முழு நேர உறுப்பினர்களாகவும் இருவர் மத்திய அரசின் பகுதி நேர உறுப்பினர்கள் ஆவர். ஏனைய நால்வரும் இவ்வாணையத்தினுள் உள்ள மாநிலங்களின் பகுதி நேர உறுப்பினர்கள் ஆவர்.

18) தமிழக அரசானது காவேரி நதிநீர் நீர் மேலாண்மை ஆணையம் (Cauvery Water Management Authority) மற்றும் காவேரி நதி நீர் ஒழுங்காற்றுக் குழு (Cauvery Water Regulation Committee) ஆகியவற்றுக்கான தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக முறையே **S.K.பிரபாகர் மற்றும் R.செந்தில் குமார்** ஆகியோரை நியமித்துள்ளது.

## தேசம்

1) **உலக சுற்றுச்சூழல் தினமான (World Environment Day) :** ஜூன் 5 அன்று இந்திய அரசானது 2022ம் ஆண்டுக்குள் ஒற்றைப் பயன்பாடு கொண்ட பிளாஸ்டிக்கினை முற்றிலுமாக ஒழிக்கத் திட்டமிட்டுள்ளது.

2) ஜம்மு காஷ்மீரில், முதலமைச்சர் மெஹபூபாவின் தலைமையிலான ஆட்சியானது, PDP - BJP கட்சிகளுக்கு இடையிலான கூட்டணி முறிந்ததால் கலைக்கப்பட்டது. அதன் பின்னர் 2018, **ஜூன் 20** அன்று ஜம்மு காஷ்மீரில் ஆளுநர் ஆட்சி (Governor Rule) கொண்டு வரப்பட்டது. முன்னாள் தலைமைச் செயலாளர் B.B.வியாஸ் மற்றும் K.விஜய் குமார் ஆகியோர் ஆளுநர் N.N.வோஹ்ராவுக்கு ஆலோசகர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

3) **ஜன் அவுஷாதி சுவிதா (Janaushadhi Suvidha) :** மத்திய அரசானது உயிரியல் சிதைவுக்கு உள்ளாகும் சுகாதாரமான அணையாடைகளை **(Oxo-biodegradable Sanitary Napkin) பிரதான் மந்திரி பாரதிய ஜன் அவுஷாதி பரியோஜனா** (PMBJP) திட்டத்தின் கீழ் வழங்கிடத் திட்டமிட்டுள்ளது. விலை குறைவான இந்த அணையாடைகள் நாடு முழுவதிலும் உள்ள சுமார் 3600 அரசு மருந்துக் கடைகளில் (Jan aushadhi Kendras) விற்பனை செய்யப்பட உள்ளன.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

4) **அணை பாதுகாப்பு மசோதா** 2018 **(Dam Safety Bill 2018) :** மத்திய அமைச்சரவையானது அணை பாதுகாப்பு மசோதா, 2018-னை பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்த ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்த மசோதாவானது அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களும் ஒரே மாதிரியான அணை பாதுகாப்பு முறைகளையும் மனித உயிர்கள், கால்நடைகள் மற்றும் இதர சொத்துக்களைப் பாதுகாக்கும் அம்சங்களையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.

5) மெட்ரோ ரயில் போக்குவரத்து அமைப்புக்கான தர மதிப்புகளை (Standards for Metro rail Systems) நிர்ணயம் செய்வதற்காக **இ.ஸ்ரீதரன்** தலைமையிலான குழுவினை (E.Sreedharan Committee) அமைக்க பிரதமர் மோடி ஒப்புதல் அளித்துள்ளார்.

6) யோகாவினைப் பிரபலப்படுத்துவதற்காக ஹரியானா முதல்வர் மனோகர் லால் கட்டார் **'யோக் ஆயோக்' (Yog Aayog)** எனும் திட்டத்தினை **ஹரியானாவில்** தொடங்கி வைத்துள்ளார்.

7) டெல்லி அரசானது பள்ளி மாணவர்களுக்கு **'மகிழ்ச்சிக்கான பாடத்திட்டத்தினைப்' (Happiness Curriculum)** புதிதாக அறிமுகப்படுத்தியுள்ளது. இப்பாடத்திட்டமானது தியானம், அறவியல் விழுமியங்கள் மற்றும் மனதிற்கான பயிற்சிகள் ஆகியவற்றை மாணவர்களுக்கு அளிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

8) பஞ்சாப் மாநில முதல்வர் அமரிந்தர் சிங், அம்மாநிலத்தை மிகவும் ஆரோக்கியமான மாநிலமாக மாற்றுவதற்காக **'தோந்தாரஸ்ட் திட்டம்' (Mission Tondarust)** என்னும் திட்டத்தினைத் தொடங்கியுள்ளார்.

9) இந்தியாவிலேயே முதன் முறையாக, பெண்களுக்கு இழைக்கப்படும் குற்றங்களுக்கு விரைவான நீதி கிடைப்பதை உறுதி செய்வதற்காக "சாகி சுரக்ஷா மேம்பட்ட டி.என்.ஏ. தடயவியல் ஆய்வகமானது" (Sakhi Suraksha Advanced DNA forensic Lab) **சண்டிகரில்** அமைக்கப்பட உள்ளது.

10) பொலிவுறு நகரங்கள் திட்டத்தின் கீழ் (Smart Cities Mission) நிதி பெறும் **100வது நகரமாக ஷில்லாங்** தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

11) சர்வதேச விமானங்களில் **'மஹாராஜா'** என்னும் உயர் வகுப்பு இருக்கைகளை (Maharaja Business Class Seats) **ஏர் இந்தியா** நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

12) தெலுங்கானா மாநிலமானது தனது மாநிலம் உருவானதன் நான்காவது தினத்தை 2018 ஜூன் 2 அன்று கொண்டாடியது. ஒன்றுபட்ட ஆந்திரப் பிரதேச மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்டு **2014 ஜூன் 2** அன்று தெலுங்கானா மாநிலம் உருவாக்கப்பட்டது.

13) ஒடிசாவின் கோனார்க் கடல் பகுதியில் அமைந்துள்ள **‘சந்திரபாகா கடற்கரையானது’** (Chandrabagha beach) **நீல நிறக் கொடி சான்றிதழ் (Blue Flag Certification)** பெறும் **ஆசியாவின் முதலாவது** கடற்கரையாகும்.

14) உத்திரப் பிரதேச மாநிலத்திலுள்ள **முகல்சராய் இரயில் நிலையமானது** (Mugalsarai Railway Station) **‘தீன் தயாள் உபாத்யாய் இரயில் நிலையம்’** எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

15) அஸ்ஸாமின் **திப்ருகார் இரயில் நிலையமானது** (Dibrugarh Railway Station) **கூகுள் நிறுவனத்தினால்** வழங்கப்படும் இலவச வைஃபை சேவையைப் பெறும் (Google's free Wi-Fi Service) இந்தியாவின் **400வது** இரயில் நிலையமாகும். (இந்த சேவையினை முதலாவதாக, மும்பை சென்ட்ரல் ரயில் நிலையமானது 2016ல் பெற்றது.) ரயில் நிலையங்களில் 30 நிமிட இலவச வைஃபை சேவையினை வழங்குவதற்காக இந்திய ரயில்வே மற்றும் கூகுள் இடையே 2015 டிசம்பரில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

16) இந்தியாவின் **முதலாவது சரக்குகளைக் கையாளும் கிராமமானது (freight Village) வாரணாசியில்** அமைக்கப்பட்டுள்ளது. கிழக்குப் போக்குவரத்து வழித்தடம் (Eastern Transport Corridor) மற்றும் அதனையொட்டிய பகுதிகளில் பண்டகப் போக்குவரத்துக்கு ஆகும் செலவினைக் குறைப்பதே இதன் நோக்கமாகும்.

17) இந்தியாவின் **தேசிய டிஜிட்டல் நூலகமானது** (National Digital Libray of India) புது தில்லியில், **தேசிய வாசிப்பு தினமான (National Reading Day)** 2018 **ஜூன் 17** அன்று தொடங்கி வைக்கப்பட்டது.

18) கிராமப்புறங்களில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பசுமைப் பொருளாதாரத்திற்கு பங்களிப்பதற்கும் **“சோலார் சர்கா”** (Solar Charkha Mission) என்னும் திட்டத்தினை குடியரசுத் தலைவர் தொடங்கி வைத்தார்.

19) **ஐக்கிய நாடுகள் சூழலியல் திட்டத்தின்** (United Nations Environment Programme - UNEP) செயல் இயக்குநர் **‘எரிக் சோலைம்’** (Erik Solheim) மற்றும் அதன் நல்லெண்ண தூதுவரான **தியா மிர்சா** (Diya Mirza) இருவரும் இணைந்து தாஜ்மகாலைச் சுற்றியுள்ள பகுதிகளில் பிளாஸ்டிக் மாசுபாடுகளை அகற்றுவதற்காக **“நெகிழி மாசுபாடுகளை ஒழிப்பதற்கான தாஜ் பிரகடனத்தை”** (Taj Declaration to beat Plastic Pollution) வெளியிட்டுள்ளனர்.

20) **நோய்த் தொற்றினைத் தடுக்கும் வகையில் தானாக செயலிழக்கும் வகையிலான ஊசிகளைப் (auto-disable syringes)** பயன்பாட்டுக்குக் கொண்டு வரும் நாட்டின் **முதலாவது மாநிலம் ஆந்திரப் பிரதேசம்** ஆகும். (தானாகச் செயலிழக்கும் ஊசிகள் ஒரு முறை மட்டுமே உபயோகிக்கப்படக் கூடியவை ஆகும்.) இது **உலக ஹெபடைட்டிஸ் தினமான ஜூலை 28** அன்று நடைமுறைப்படுத்தப்பட உள்ளது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

21) **மத்திய இரயில்வே அமைச்சரான பியூஷ் கோயல் (Piyush Goyal)** புதிய **ஹம்சஃபர் ஜோத்பூர் பாந்த்ரா விரைவு ரயிலினைக்** (Humsafar Jodhpur Bandra Express) கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்த ரயிலானது 2018 ஜூன் 2 அன்று இராஜஸ்தானின் ஜோத்பூரில் உள்ள பகத் கி கோதி ரயில் நிலையத்திலிருந்து (Bhagat Ki Kothi Railway Station) பாந்த்ராவுக்கு தனது பயணத்தைத் தொடங்கியது.

22) குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் **திரிபுராவின் மாநிலக் கனியாக** (State Fruit of Tripura) **'ராணி அன்னாசியினை' (Queen Pineapple)** அறிவித்துள்ளார்.

23) ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படும் **'கோவா புரட்சி தினம்'** (Goa Revolution Day) ஆனது **2018 ஜூன் 19** அன்று கொண்டாடப்பட்டது.

24) மத்திய குடிநீர் மற்றும் சுகாதார அமைச்சகமானது (Ministry of Drinking water and Sanitation) 'தூய்மை இந்தியா திட்டத்தின்' மூன்றாவது நிலையின் கீழ் (Phase III of Swachh Bharat Mission) **10 புதிய தூய்மை அடையாள இடங்களைப் (Swachh Iconic places)** பட்டியலிட்டுள்ளது. இத்திட்டமானது உத்தரகாண்ட் மாநிலத்தின் மனா கிராமத்தில் (Mana Village) இருந்து தொடங்கி வைக்கப்பட்டது. (தமிழகத்தின் **மதுரை மீனாட்சி ஆலயம்** ஆனது தூய்மை அடையாள இடமாக முதல் நிலையின் போது தேர்ந்தெடுக்கப்பட்டது.) பட்டியலிடப்பட்ட 10 இடங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| ➢ ராகவேந்திர சுவாமி கோவில் | ஆந்திரப் பிரதேசம் |
| ➢ ஹசார்துரை அரண்மனை (Hazardurai Palace) | மேற்கு வங்கம் |
| ➢ பிரம்ம சரோவர் கோவில் | ஹரியானா |
| ➢ விதுர் குத்தி (Vidur Kuti) | உத்தரப் பிரதேசம் |
| ➢ மனா கிராமம் | உத்தரகாண்ட் |
| ➢ கன்வாஷ்ரம் (Kanvashram) | உத்தரகாண்ட் |
| ➢ பாங்கோங் ஏரி (Pangong Lake) | ஜம்மு-காஷ்மீர் |
| ➢ நாகவாசுகி கோவில் (Nagvasuki Temple) | உத்தரப் பிரதேசம் |
| ➢ இமா கெய்த்தல் சந்தை (Ima Keithal Market) | மணிப்பூர் |
| ➢ சபரிமலை கோவில் | கேரளா |

25) 23-வது ஐரோப்பிய ஒன்றிய திரைப்பட விழாவானது (23rd European Union Film Festival) இந்தியாவில் நடத்தப் பெற்றது. இது புது தில்லியிலுள்ள சிரி கோட்டை அரங்கத்தில் (Siri Fort Auditorium) ஜூன் மாதம் 18 முதல் 24 வரை நடைபெற்றது.

26) பொலிவுறு நகரங்கள் (Smart City) திட்டத்தின் கீழ் இந்திய இராணுவமானது இராஜஸ்தானில் உள்ள **ஜெய்சால்மர் இராணுவ நிலையத்தினை** அனைத்து

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

வசதிகளும் கொண்ட **‘பொலிவுறு நிலையமாக’ (Smart Facility)** மாற்றத் திட்டமிட்டுள்ளது.

27) மத்திய அரசானது குஜராத்தின் காந்தி நகரில், **உலகிலேயே முதலாவது ‘மனிதாபிமான அடிப்படையிலான தடயவியல் மையத்தினை’** (World’s 1st Humanitarian Forensics Centre) அமைக்கத் திட்டமிட்டுள்ளது.

28) **‘வாஞ்சிய பவன்’ (Vanjiya Bhawan)** என்னும் வர்த்தகத் துறைக்கான (Department of Commerce) புதிய அலுவலக வளாகத்தினை பிரதமர் நரேந்திர மோடி புது தில்லியில் தொடங்கி வைத்தார்.

29) **மும்பையிலுள்ள விக்டோரியா புராதானச் சின்னங்களின் தொகுப்பமைவானது (Victorian and Art Deco Ensembles of Mumbai)** இந்தியாவின் 37-வது **யுனெஸ்கோ உலகப் புராதானச் சின்னமாகத்** (UNESCO World Heritage Site) தேர்வு செய்யப்பட்டுள்ளது. மகாராஷ்டிராவில் தற்போது 5 புராதான இடங்கள் உள்ளன. இந்தியாவிலேயே அதிக புராதான இடங்களைப் பெற்றுள்ள மாநிலம் இதுவேயாகும்.

30) **கேரள** சுற்றுலாத் துறையானது தனது மாநிலத்திற்கு வரக்கூடிய சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையினை அதிகரிப்பதற்காக **‘Come out and Play’** என்னும் பருவமழைக்கால பிரச்சாரத்தினைத் தொடங்கியுள்ளது.

## சர்வதேசம்

1) **ஜூன் மாதத்தில் குடியரசுத் தலைவர் ராம்நாத் கோவிந்த் மேற்கொண்ட வெளிநாட்டுப் பயணங்கள் :**

| | |
|---|---|
| ➢ **கிரேக்கம்** (Greece) | தலைநகரம் : ஏதென்ஸ்<br>அதிபர் : புரோகோபிஸ் பாவ்லோ போலஸ் (Prokopis Pavlopoulos) |
| ➢ **சுரிநாம்** (Suriname) | தலைநகரம் : பரமரிபோ (Paramaribo) - தென் அமெரிக்கா<br>அதிபர் : டிசைர் டெலானோ பவுடெர்ஸ் (Desire Delano Bouterse) |
| ➢ **கியூபா** (Cuba) | தலைநகரம் : ஹவானா (Havanna)<br>அதிபர் : மிகுல் டியாஸ் கேனல் (Miguel Diaz - Canel) |

2) டொனால்ட் டிரம்ப் தலைமையிலான அமெரிக்கா அரசானது **மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகள் குழுவிலிருந்து** (UNHRC) வெளியேறப்போவதாக **2018 ஜூன் 20** அன்று அறிவித்தது.

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

3) மாசிடோனியா நாடானது, **'மாசிடோனியக் குடியரசு'** (Republic of Macedonia) என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதன் தலைநகரம் : **ஸ்காப்ஜே (Skopje)**

4) பெண்கள் வாகனம் ஓட்டுவதற்கு இருந்த தடையினை **சவுதி அரேபியா** நீக்கியுள்ளது.

5) அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் மற்றும் வட கொரிய அதிபர் கிம் ஜோங் உன் ஆகிய இருவரும் ஒன்றாகக் கலந்து கொண்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த **அமெரிக்க-வட கொரியா மாநாடானது** (US-North Korea Summit) 2018 **ஜூன்** 12 அன்று **சிங்கப்பூரின் சென்டோசா** தீவில் நடைபெற்றது.

6) மிகவும் விலை மலிவான திரவநிலைப்படுத்தப்பட்ட இயற்கை எரிவாயுவினை (Liquified Petroleum Gas) ரஷ்ய நிறுவனமான கேஸ்ப்ரோமிடம் (Gazprom) இருந்து இந்தியா 2018 ஜூன் 4 அன்று வாங்கியது.

7) **1989ஆம் ஆண்டு தியானன்மென் சதுக்கத்தில்** நடைபெற்ற படுகொலையின் (Tianenmen Square Massacre) 29வது ஆண்டு நினைவு தினத்தினை **சீன அரசானது** 2018 ஜூன் 4 அன்று அனுசரித்தது.

8) ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் சபையானது (United Nations General Assembly - UNGA) **தென் ஆப்பிரிக்கா, இந்தோனேசியா, டொமினிக் குடியரசு** (Dominican Repubic), **ஜெர்மனி மற்றும் பெல்ஜியம்** ஆகிய நாடுகளை, **ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் குழுவின்** (UN Secuity Council) **பகுதி நேர உறுப்பினர்களாகத்** (Non-Permanent Members) தேர்வு செய்துள்ளது. இவ்வுறுப்பினர்கள் 2019 **ஜனவரி 1-லிருந்து** அடுத்த **இரண்டு ஆண்டு** காலத்திற்கு உறுப்பினர் பதவியில் இருக்க முடியும்.

9) **இந்தியா மற்றும் வியட்நாம்** நாடுகள் கூட்டாக இணைந்து, **"முதலாவது நினைவு அஞ்சல் தலை (Postal Stamp)"** வெளியிடுவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவையானது ஒப்புதல் வழங்கியுள்ளது. இந்தத் தபால் தலையில் சாஞ்சி ஸ்தூபியும் வியட்நாமின் ஃபோ மின் கோபுரமும் (Pho Minh Pagoda) இடம் பெற்றுள்ளன. இதன் கருத்துரு : **"பழமை வாய்ந்த கட்டிடக் கலை"** (Ancient Architecture)

10) **ஐக்கிய ராஜ்ஜியத்தின் (United Kingdom)** பெண்கள் தங்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட்டு 100 **ஆண்டுகள்** ஆன நாளினை 2018 **ஜூன்** 10 அன்று கொண்டாடினர்.

11) **பட் சூறாவளியானது** (BUD Hurricane) **மெக்சிகோவின்** பசிபிக் கடற்கரையைத் தாக்க வாய்ப்புள்ளதாகக் கருதப்படுகிறது.

12) **உலகிலேயே கஞ்சா பயன்பாட்டினை (Marijuana)** சட்டப் பூர்வமாக அங்கீகரித்த **இரண்டாவது** நாடு **கனடா** ஆகும். கஞ்சா உற்பத்தி, விற்பனை மற்றும் நுகர்வு

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

ஆகியவற்றை உலகிலேயே **முதன் முறையாக உருகுவே** நாடானது, **2013-ம்** ஆண்டு டிசம்பர் மாதத்தில் சட்டப் பூர்வமாக்கியது குறிப்பிடத் தகுந்தது.

## மாநாடுகள் & கருத்தரங்குகள்

| மாநாடு/கருத்தரங்குகள் | நோக்கம் | இடம் | நாள் |
|---|---|---|---|
| ➢ **44-வது G7 மாநாடு,** 2018<br>➢ [45-வது மாநாடானது பிரான்சின் பியர்ரிட்சில் (Biarritz, France) 2019-ம் ஆண்டு நடைபெற உள்ளது.<br>➢ 43-வது மாநாடானது இத்தாலியின் சிசிலியில் 2017ஆம் ஆண்டில் நடைபெற்றது.] | இந்த ஆண்டுக்கான G7 மாநாட்டில் கனடாவானது 5 கருத்துருக்களை வெளியிட்டுள்ளது :<br>❖ அனைவருக்கும் பயன்படும் வகையிலான வளர்ச்சிக்காக முதலீடு செய்தல்.<br>❖ எதிர்காலத்தில் வேலை வாய்ப்புக்கான தயாரிப்பில் ஈடுபடுதல்.<br>❖ பருவ நிலை மாறுபாடு, பெருங்கடல்கள் மற்றும் தூய்மையான ஆற்றல் ஆகியவற்றுக்காக இணைந்து செயல்படுதல்.<br>❖ மிகவும் பாதுகாப்பான அமைதியான உலகினைக் கட்டமைத்தல்<br>❖ பாலின சமத்துவத்தை மேம்படுத்துதல் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தலை ஊக்குவித்தல் | கியூபெக், கனடா (Quebec, Canada) | 2018, ஜூன் 8-9 |
| ➢ **இந்தியா, பிரேசில் மற்றும் தென் ஆப்பிரிக்க நாடுகளின் (IBSA) அமைச்சர்கள் மாநாடு.** | மூன்று நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகம், தகவல் பரிமாற்ற வாய்ப்புகள் போன்றவற்றை மேம்படுத்துதல் மற்றும் உலக அளவிலான வறுமை ஒழிப்பு, மற்றும் சமூக மேம்பாட்டிற்கு அடித்தளமிடுதல்.<br>இம்மாநாட்டின் வெளிப்பாடு : **“தெற்கு - தெற்கு ஒத்துழைப்பிற்கான இப்சா பிரகடனம்” (IBSA** Declaration on South – South Cooperation) | பிரிட்டோரியா, தென் ஆப்பிரிக்கா (Pretoria, South Africa) | 2018, ஜூன் 5 |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | | |
|---|---|---|---|
| ➢ **11-வது புவி நுண்ணறிவு ஆசிய மாநாடு 2018** (11th Geo-Intelligence Asia Meet 2018) | புவிப் பரப்பியல் தொழில்நுட்பத்தில் புதுமையான முயற்சிகளை வெளிப்படுத்த ஏதுவான தளத்தினை உருவாக்குதல்.<br>கருத்துரு : "புவிப்பரப்பியல் : உள்நாட்டு பாதுகாப்பு மற்றும் வெளிநாட்டு அச்சுறுத்தல்கள் தடுப்புக்கான பலப்படுத்தப்பட்ட அமைப்பு" (Geospatial : A Force Multiplier for Defense and Internal Security) | புது தில்லி, இந்தியா | 2018, ஜூன் 4-5 |
| ➢ **18-வது ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு (SCO) மாநாடு** [குயிங்டாவோ பிரகடனம் - Qingdao Declaration] | தீவிரவாதம், பிரிவினைவாதம் மற்றும் பயங்கரவாதம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான மூன்றாண்டு திட்டத்தினை நடைமுறைபடுத்துதல். | குயிங்டாவோ, சீனா | 2018, ஜூன் 9-10 |
| ➢ **தகவல் மற்றும் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பத்துக்கான சர்வதேச மாநாடு** (International Conference on Information and Communication Technology) | அரசு மற்றும் தனியார் துறைகளை ஒன்றாக இணைத்து நீடித்த தகவல் தொலைத் தொடர்பு தொழில் நுட்பத்துக்கான செயல் திட்டத்தினை உருவாக்குதல்.<br>கருத்துரு : **"நீடித்த வளர்ச்சி, பொலிவுறு சமுதாயத்துக்கான இலக்குகள்"** (Sustainable Develoment, Goals for Smart Society) | காத்மாண்டு, நேபாளம் | 2018, ஜூன் 17-18 |
| ➢ **நிணநீர் யானைக்கால் நோயை ஒழிப்பதற்கான உலகளாவிய கூட்டணியின் 10-வது கூட்டம்** | மத்திய நல்வாழ்வு மற்றும் குடும்ப நல அமைச்சர் (Union Minister of Health and Family Welfare) J.P. நட்டா இம்மாநாட்டினைத் தொடங்கி வைத்தார். நிணநீர் யானைக்கால் நோயினை முற்றிலுமாக ஒழிப்பதே இதன் நோக்கமாகும். | புது தில்லி, இந்தியா | 2018, ஜூன் 13 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | | |
|---|---|---|---|
| ➢ 106வது இந்திய அறிவியல் மாநாடு (16th Indian Science Congress) | இம்மாநாடானது பஞ்சாபின் 'லவ்லி புரஃபஷனல் பல்கலைக்கழகத்தில்' (Lovely Professional University in Jalandhar, Punjab) நடைபெற உள்ளது. கருத்துரு : **"எதிர்கால இந்தியா : அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்"** | ஜலந்தர், பஞ்சாப் | 2019 ஜனவரி 3-7 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது. |
| ➢ நீதி ஆயோக்கின் நான்காவது ஆளுகைக் குழுக் கூட்டம் (4th Governing Council Meeting of NITI Aayog) | 23 மாநில முதலமைச்சர்கள் மற்றும் அந்தமான்-நிக்கோபார் தீவுகளின் லெப்டினன்ட் கவர்னர் ஆகியோர் கலந்து கொண்ட இம்மாநாட்டிற்கு பிரதமர் தலைமை தாங்கினார். | ராஷ்ட்ரபதி பவன், புது தில்லி | 2018, ஜூன் 17 |
| ➢ 2 + 2 இந்திய அமெரிக்கப் பேச்சு வார்த்தை (2 + 2 India - US Dialogue) | உலகளாவிய சவால்களை எதிர்கொள்ள இரு நாடுகளுக்கிடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பை மேம்படுத்துதல் | வாஷிங்டன் DC, அமெரிக்கா | 2018, ஜூலை 6 |
| ➢ மூன்றாவது வருடாந்திர ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மாநாடு (Asian Infrastructure and Investment Bank)<br>➢ [இதன் நான்காவது மாநாடு 2019 ஜூலையில் லக்சம் பர்க்கில் நடைபெற உள்ளது.] | இது ஆசிய பிராந்தியத்தில் வளமை மற்றும் பாதுகாப்பு மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு நடத்தப்பெற்றதாகும். கருத்துரு : : **"உள்கட்டமைப்பிற்காக நிதி திரட்டுதல் : புத்தாக்கம் மற்றும் ஒருங்கிணைவு"** | மும்பை, மகாராஷ்டிரா | 2018, ஜூன் 26 |
| ➢ மொத்த வியாபாரத்துக்கான உலக ஒன்றியத்தின் மாநாடு (World Union of Wholesale Markets Conference) | இம்மாநாடானது ஹரியானா மாநில வேளாண் பொருட்கள் சந்தைப்படுத்தல் வாரியத்தால் (Haryana State Agricultural Marketing Board) நடத்தப்பட்டது. | குரு கிராம், ஹரியானா | 2018, அக்டோபர் 10-13 (நடைபெற உள்ளது) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## திட்டங்கள்

| திட்டங்கள் | நோக்கம்/செய்திகளில் வந்ததன் காரணம் | அமைச்சகம்/ மத்திய அமைச்சரவை/ மாநில அரசு | நாள் |
|---|---|---|---|
| ➢ கன்யா வன் சம்ரிதி யோஜனா (Kanya Van Samruddhi Yojana) | இத்திட்டத்தின் படி விவசாயிகளின் குடும்பத்தில் பெண் குழந்தைகள் பிறந்தால், மரக் கன்றுகள் வழங்கப்படும். | மகாராஷ்டிர மாநில அரசு | 2018, ஜூன் 27 |
| ➢ சேவா போஜ் யோஜனா (Seva Bhoj Yojana) | பொது மக்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக, சமய அறக்கட்டளை நிறுவனங்களால் வாங்கப்படும் குறிப்பிட்ட உணவுப் பொருட்களுக்கு நிதியுதவி அளித்தல் | மத்திய கலாச்சார அமைச்சகம் | 2018, ஜூன் 11 |
| ➢ கோபபந்து சம்பதிகா ஸ்வஸ்த்ய பீமா யோஜனா (Gopabandhu Sambadika swasthya Bima Yojana) | ஒடிசா மாநிலத்தில் உள்ள பத்திரிக்கையாளர்களுக்கான புதிய சுகாதாரக் காப்பீட்டுத் திட்டம் | ஒடிசா மாநில அரசு | 2018, ஜூன் 01 |
| ➢ சூர்ய சக்தி கிசான் யோஜனா (Suryashakthi Kisan Yojana) | விவசாயிகள் சூரிய ஒளி மின் உற்பத்தியை உபயோகப்படுத்துவதனை ஊக்குவித்தல் | குஜராத் மாநில அரசு | 2018, ஜூன் 24 |
| ➢ பரிவர்தன் திட்டம் (Pariwartan Scheme) | திவாலான மின் உற்பத்தித் திட்டங்களைப் பாதுகாத்தல் மற்றும் அவற்றை நொடித்தல் மற்றும் திவால் சட்டத்தின் (insolvency and bankruptcy Code) கீழ் விற்பனை செய்வதிலிருந்து பாதுகாப்பு அளித்தல் | மத்திய அரசு | 2018, ஜூன் 21 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | | |
|---|---|---|---|
| ➢ கிரிஷி கல்யாண் அபியான் (Krishi Kalayan Abhiyan) | மேம்பட்ட விவசாயத் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதன் மூலம் விவசாயிகள் தங்கள் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்குதல் | மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நல்வாழ்வு அமைச்சகம் | 2018, ஜூன் 1 முதல் 2018 ஜூலை 31 வரை |

## *இராணுவப் பயிற்சிகள் – ஜூன் 2018*

| பயிற்சியின் பெயர் | பங்கு பெற்ற நாடுகள் | பயிற்சியின் வகை | நடைபெற்ற இடம் | நாள் |
|---|---|---|---|---|
| ➢ **மலபார் 2018** | இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் | 22-வது கடற்பயிற்சி | குவாம், பிலிப்பைன்ஸ் கடல் (Guam, Philippine Sea) | 2018, ஜூன் 6 - 15 |
| ➢ **சூர்ய கிரண் XIII** | இந்தியா & நேபாளம் | வருடாந்திர இரு தரப்பு கூட்டு இராணுவப் பயிற்சி | பித்தோரகார் (Pithoaragarh), உத்தரகாண்ட் | 2018, ஜூன் 12 அன்று முடிவடைந்தது. |
| ➢ **ரிம்பாக் 2018 (RIMPAC 2018)**<br>➢ கருத்துரு : "திறமை, தகவமைத்தல், கூட்டாளிகள்" (Theme : "Capable, Adaptive, Partners) | இந்தியா உள்ளிட்ட 26 நாடுகள் கலந்து கொண்டன (முதன் முறையாக இஸ்ரேல், வியட்நாம், இலங்கை மற்றும் பிரேசில் ஆகிய நாடுகள் கலந்து கொண்டன) | உலகின் மிகப்பெரிய சர்வதேச கடற்பயிற்சி | ஹவாய் தீவுகள் | 2018, ஜூன் 27 முதல் ஆகஸ்ட் 2 வரை |
| ➢ **முதலாவது பிம்ஸ்டெக் இராணுவப் பயிற்சி** (BIMSTEC Military Exercise) | இந்தியா உள்ளிட்ட 7 ஆசிய நாடுகள் கலந்து கொண்டன. | முதன் முறையாக பிம்ஸ்டெக் (BIMSTEC) நாடுகள் பங்கேற்கும் கூட்டு இராணுவப் பயிற்சி | புனே, மகாராஷ்டிரா | 2018-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் நடைபெற இருக்கிறது |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## 2018 ஜூன் மாதம் விண்ணில் செலுத்தப்பட்ட ராக்கெட்டுகள்

| செயற்கைக் கோள்கள் | நாடு | ஏவு வாகனம் (Launch Vehicle) | நோக்கம் (Purpose) | ஏவப்பட்ட நாள் |
|---|---|---|---|---|
| ➢ **GLONASS - M** | ரஷ்யா | சோயுஸ் - 2.1 b (Soyuz - 2.1 b) | ரஷ்யாவின் உலகளாவிய பயண அமைப்பியல் செயற்கைக் கோள் தொகுப்பு (Russian Global Navigation System) | 2018, ஜூன் 17 |
| ➢ **GAOFEN - 6** | சீனா | லாங்க் மார்ச் - 2 D (Long March - 2 D) (அறிவியல் சோதனை செயற்கைக் கோளான லுவோஜியா - 1 (Luojia - 1) ம் ஏவப்பட்டது. | புவி நோக்கு செயற்கைக் கோள் (Earth observing Satellite) குறிப்பாக விவசாய ஆராய்ச்சி மற்றும் பேரிடர் கண்காணிப்புக்காக அனுப்பப்பட்டது. | 2018, ஜூன் 2 |
| ➢ **FENGYUN - 2 H** | சீனா | லாங்க் மார்ச் - 3 A (Long March - 3 A) | வானிலை அறியும் புவிநிலைச் செயற்கைக் கோள் (Geostationery Meteorological Satellite) | 2018, ஜூன் 5 |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## பாதுகாப்பு & விண்வெளி

1) **ஆபரேஷன் நிஸ்தார்** (Operation NISTAR): புயலால் பாதிக்கப்பட்ட ஏமன் நாட்டின், **சோகோட்ரா தீவில் (Socotra island)** அகப்பட்டுக் கொண்ட 38 இந்தியர்களை **ஐ.என்.எஸ். சுனயானா (INS SUNAYNA)** கப்பலின் உதவியுடன் இந்தியக் கடற்படையானது பாதுகாப்பாக மீட்டது. இந்த மீட்பு நடவடிக்கையானது 'ஆபரேஷன் நிஸ்தார்' என்ற பெயரால் அழைக்கப்படுகிறது.

2) பணியின் போது உடல் ஊனமடைந்த இராணுவ வீரர்களைக் கவுரவப்படுத்தும் வகையில் இந்திய இராணுவமானது 2018-ம் ஆண்டினை **"சேவையின் போது உடல் ஊனமடைந்த இராணுவ வீரர்களுக்கான ஆண்டாக"** (Year of Disabled Soldiers in Line of Duty) அனுசரித்தது.

3) **இந்திய வான் படைக்கு** (Indian Air Force) தென்னிந்தியாவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது பெண் போர் விமானி (1st Women fighter pilot) என்ற பெருமையை **'மேகனா ஷான்பாக்'** (Meghana Shanbough) பெற்றுள்ளார்.

4) **அக்னி - 5 ஏவுகணை :** உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் அக்னி - 5 ஏவுகணையானது (Agni - 5 Missile) 2018 ஜூலை 3 அன்று வெற்றிகரமாகச் சோதித்துப் பார்க்கப்பட்டது. இந்த ஏவுகணையானது ஒடிசாவிலுள்ள டாக்டர் அப்துல் கலாம் தீவில் இருந்து நடமாடும் ஏவு வாகனத்தின் (Mobile launcher) உதவியுடன் விண்ணிற்குச் செலுத்தப்பட்டுச் சோதித்துப் பார்க்கப்பட்டது.

5) **தனுஷ் பீரங்கி (Dhanush Artillery Gun (or) Dhanush Howitzer) :** உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட தனுஷ் பீரங்கியானது தனது இறுதிக் கட்ட சோதனைகளை முடித்து இராணுவத்தில் சேர்க்கப்படுவதற்குத் தயார் நிலையில் உள்ளது.

6) **இந்தியக் கடலோரக் காவல் படையானது (Indian Coast Guard)** ICG'S **ராணி ராஷ்மோனி** (ICGS Rani Rashmoni) என்னும் விரைவு ரோந்துக் கப்பலை விசாகப்பட்டினத்தில் இருந்து செயல்பாட்டுக்குக் கொண்டு வந்தது.

7) 'விண்வெளிக் குப்பைகளை அகற்றும் திட்டத்தின்' **Remove DEBRIS Mission** கீழ் விண்வெளியில் உள்ள குப்பைகளை அகற்றும் முதலாவது செயற்கைக் கோளானது Space X நிறுவனத்தின் CRS -14 ராக்கெட்டின் மூலம் விண்ணிற்குச் செலுத்தப்பட்டது.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

## அறிவியல் & தொழில்நுட்பம்

| புதிய கண்டுபிடிப்புகள் | வகை/நோக்கம் | இடம் |
|---|---|---|
| ➢ **மிச்சிகன் மைக்ரோ மோட்** (Michigan Micro Mote) | 0.3 மில்லிமீட்டர் மட்டுமே அளவுடைய உலகின் மிகச் சிறிய கணினியான இது புற்றுநோயைக் கண்காணிக்கும் புதிய வழிகளைக் கண்டறிய உதவுகிறது. | மிச்சிகன் பல்கலைக் கழகம், அமெரிக்கா |
| ➢ **கிரைசில்லா வோல்யூப்ஸ்** (Chrysilla Volupes) | சிலந்தி - சால்டிசிடே (Salticidae) (150 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டது) | வயநாடு வன விலங்கு சரணாலயம், கேரளா |
| ➢ **செயற்கை இலை** (Artificial Leaf) | நானோ குறைகடத்திப் படிகத்தினால் (Semi-conductor Nano Crystal) உருவாக்கப்பட்ட இந்த செயற்கை இலையானது வளிமண்டலத்திலுள்ள கார்பனை உறிஞ்சிக் கொள்ளும் திறன் பெற்றது. | இந்திய அறிவியல் நிறுவனம் (IISC), பெங்களூர் |

1) செஷல்ஸ் நாட்டின் அதிபரான 'டேனி ஃபோர்' (Seychelles President 'Dany Faure') ஒரு ஜோடி **'இராட்சத அல்டாப்ரா ஆமைகளை'** (Giant Aldabra Tortoise) நல்லெண்ண நடவடிக்கையாக இந்தியாவுக்கு வழங்கியுள்ளார். இந்த இரு ஆமைகளும் புது தில்லியிலுள்ள நேரு உயிரியல் பூங்காவில் விடப்பட்டுள்ளன.

2) **(EPIC 211945201b அல்லது K2 - 236b) மற்றும் (EPIC 211945201 அல்லது K2-236) :** முதன் முறையாக அகமதாபாத்தில் உள்ள இயற்பியல் ஆராய்ச்சி ஆய்வகத்தில் (Physical Research Laboratory) பணிபுரியும் விஞ்ஞானிகள் சூரியனைப் போன்ற ஒரு நட்சத்திரத்தையும் அதனைச் சுற்றி வரும் ஒரு கோளினையும் கண்டறிந்துள்ளனர். இங்கு **K2 - 236** என்பது நட்சத்திரத்தையும் **K2 - 236 b** என்பது கோளினையும் குறிக்கிறது.

3) 70 செ.மீ. அளவுடைய **இந்தியாவின் முதலாவது ரோபோ தொலை நோக்கியான GROWTH** (கணத்தில் இடம் மாறுகின்ற வான் பொருட்களைக் கண்காணிப்பதற்கான வானியல் ஆய்வகங்களின் உலகளாவிய தொகுப்பு - **G**lobal **R**elay of **O**bservations **W**atching **T**ransients **H**appen) **லடாக்கின் ஹனுலில்** (Hanule, Ladakh) உள்ள இந்திய வானியல் ஆய்வகத்திலிருந்து (Indian Astronomical Observatory) தனது செயல்பாட்டினைத் தொடங்கியுள்ளது.

4) தமிழ்நாட்டின் காரைக்குடியில் உள்ள அறிவியல் மற்றும் தொழிற்துறை ஆராய்ச்சி நிறுவனத்தின் மத்திய மின்வேதியியல் ஆராய்ச்சி நிறுவனமும் (CSIR'S Central Electro Chemical Research Institute - CECRI) ராசி தனியார் சூரிய ஒளி மின்னாற்றல் நிறுவனமும் (RAASI Solar Power Private Limited) கூட்டாக இணைந்து **முதன்முறையாக லித்தியம் அயனி மின்கலத்தினை** உள்நாட்டிலேயே தயாரிக்கும் திட்டத்தில் (1st indigeneous Lithium Ion Battery Project) கையெழுத்திட்டுள்ளன. இந்த மின்கலம் தயாரிக்கும் உற்பத்தி ஆலையானது தமிழ்நாட்டின் **கிருஷ்ணகிரியில்** அமைக்கப்பட உள்ளது.

5) **'உயிரிப் போலிகள்' (Biomimetics)** என்னும் கருத்துருவின் அடிப்படையில், மகரந்த சேர்க்கையில் ஈடுபடுவதற்காக **ரோபின்செக்டுகள்** அல்லது **நோவா-கிராஃப்டர்கள்** (Robinsects or Nova-Crafters) என்னும் புதிய வகை ரோபோக்களை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

6) **'இரயில் மதத்' செயலி (RAIL MADAD App)** : மத்திய இரயில்வே அமைச்சகமானது, (Ministry of Railways) இரயிலில் பயணிப்பவர்களின் குறைகள் களையப்படுவதைத் துரிதப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் RAIL MADAD (**M**obile **A**pplication for **D**esired **A**ssistance **D**uring Travel - பயணத்தின் போது தேவைப்படும் உதவிகளை வழங்குவதற்கான அலைபேசிப் பயன்பாடு) என்னும் கைபேசிச் செயலியினை அறிமுகப்படுத்தியுள்ளது.

7) **"காப் கனெக்ட் செயலி" (COP CONNECT App)** : காவல் துறைக்குள் நடைபெறும் உட்புற தகவல் பரிமாற்றத்துக்காக 'காப் கனெக்ட்' என்னும் செயலியினை **தெலுங்கானா** மாநில அரசானது அறிமுகப்படுத்தியுள்ளது.

8) **"நெய்பர்லி செயலி" (Neighbourly App)** : **கூகுள் இந்தியா** நிறுவனமானது மும்பை மாநகரின் உள்ளூர் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக 'நெய்பர்லி செயலியினை' அறிமுகப்படுத்தியுள்ளது.

## பொருளாதாரம்

1) **Y.M.தியோஸ்தலி குழுவின் (Y.M.Deosthalee Committee)** பரிந்துரைகளின் படி, **பொது மக்களின் கடன் சார்ந்த தகவல்கள் அடங்கிய பதிவேடு (Public Credit Registry)** ஒன்றினை உருவாக்கிட மத்திய ரிசர்வ் வங்கியானது (Reserve Bank of India) திட்டமிட்டுள்ளது. இந்தத் தகவல் பதிவேடானது தனிநபர்கள் மற்றும் பெருநிறுவன கடனாளர்களின் (Corporate borrowers) கடன் பற்றிய தகவல்களைச் சேகரித்து வைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

2) நாட்டில் காப்பீட்டுத் துறையின் சேவையை விரிவுபடுத்தும் நோக்கில் காப்பீட்டுச் சந்தை நிறுவனங்களின் (Insurance Marketing Firms) செயல்பாடுகளை மறு ஆய்வு செய்வதற்காக காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையமானது

(Insurance Regulatory and Development Authority) **சுரேஷ் மாத்தூர்** குழுவினை (Suresh Mathur Committee) அமைந்துள்ளது.

3) **நிதி சார் கல்வியறிவு வாரம் :** நுகர்வோர் பாதுகாப்பு மற்றும் டிஜிட்டல் வங்கிப் பயன்பாடுகளைப் பாதுகாப்பாகப் பயன்படுத்துதல் ஆகிய நோக்கங்களுக்காக மத்திய ரிசர்வ் வங்கியானது (RBI) **ஜூன் 4 முதல் 8** வரையிலான வாரத்தினை 'நிதி சார் கல்வியறிவு வாரமாக' (Financial literacy Week) அறிவித்துள்ளது. இதன் கருத்துரு: **"வாடிக்கையாளர் பாதுகாப்பு"** (Customer Protection)

4) **ரெப்போ விகிதம் உயர்வு (Hike in Repo rate):** ரிசர்வ் வங்கியின் இரண்டாவது, இரு மாதங்கட்கொரு முறை வெளிவரும் 2018-19ஆம் நிதி ஆண்டுக்கான பணக் கொள்கை அறிக்கையில் (Second Bi-monthly Monetary Policy review) பணக் கொள்கைக்கான குழுவானது (Monetary Policy Committee) நேர் மாற்று மறு கொள் முதல் வீதத்தினை (Repo rate) 6%-லிருந்து 6.25%-ஆக உயர்த்தியுள்ளது.

| | |
|---|---|
| ➢ மறு கொள் முதல் வீதம் (Repo Rate) | 6.25 % |
| ➢ நேர்மாற்று மறுகொள் முதல் வீதம் (Reverse Repo Rate) | 6.00 % |
| ➢ விளிம்பு நிலை வசதி வீதம் (Marginal Standing Facility Rate) | 6.50 % |

5) **மகப்பேறு இறப்பு விகிதம் (Maternal Mortality Rate - MMR) :** பிரசவத்தின் போதோ அல்லது பிரசவம் முடிந்து 42 நாட்களுக்குள்ளாகவோ ஒரு பெண் இறந்து போவதையே மகப்பேறு இறப்பு (Maternal Mortality) என்கிறோம். இந்தியப் பதிவாளர் ஜெனரல் அலுவலகத்தால் **(Registrar General of India)** வெளியிடப்பட்டுள்ள அறிக்கையின்படி, 2014-16 இடையிலான கால கட்டத்தில் 10000 பிரசவங்களுக்கு 130 இறப்புகள் என்ற வீதத்தில் மகப்பேறு இறப்புகள் **(Ratio of the MMR is 130 per 10000 live births)** இருந்தன. (இது 2013-ஆம் ஆண்டுக்கான மகப்பேற்று இறப்பு விகிதத்தை விட 22% குறைவாகும்.)

6) சிட்னியிலுள்ள சிந்தனையாளர் குழுவான 'பொருளாதாரம் மற்றும் அமைதிக்கான நிறுவனமானது' (Institute for Economics and Peace) 2018-ம் ஆண்டுக்கான **'உலக அமைதிக்கான குறியீட்டினை' (Global Peace Index 2018)** வெளியிட்டுள்ளது. இப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 163 நாடுகளின் அமைதிக்கான தரவரிசையில் **இந்தியா 136-வது** இடத்தில் (2017ல் 137வது இடத்தில் இருந்தது) உள்ளது. ஐஸ்லாந்து முதலாவது இடத்திலும் சிரியா கடைசி இடத்திலும் உள்ளன.

7) **சர்வதேச ரியல் எஸ்டேட் வெளிப்படைத் தன்மைக்கான குறியீடு** 2018-ன் (Global Real Estate Transparency Index 2018) அறிக்கையில் பட்டியலிடப்பட்டுள்ள 100 நாடுகளில் **இந்தியா 33-வது இடத்தில்** உள்ளது. மேலும்

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

இப்பட்டியலில் ஐக்கிய ராஜ்யமானது (UK) முதலாவது இடத்திலும் வெனிசுலா கடைசி இடத்திலும் உள்ளன.

8) நீதி ஆயோக் (NITI Aayog) வெளியிட்டுள்ள **'ஒட்டு மொத்த நீர் மேலாண்மைக் குறியீட்டின்படி'** (Composite Water Management Index) **குஜராத்** மாநிலமானது நீர் மேலாண்மையில் நாட்டிலேயே சிறப்பான இடத்தில் உள்ளது. ஜார்க்கண்ட் மாநிலமானது நீர் மேலாண்மையில் மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

9) **குழந்தைப் பருவ முடிவுக் குறியீட்டில் (End of Childhood Index 2018)** பட்டியலிடப்பட்டுள்ள 175 நாடுகளின் தரவரிசையில் **இந்தியா 113-வது இடத்தில்** உள்ளது. இப்பட்டியலில் சிங்கப்பூர் மற்றும் ஸ்லோவேனியா (Slovenia) ஆகிய இரு நாடுகளும் முதலிடத்தைப் பகிர்ந்து கொண்டுள்ளன. மேற்கு ஆப்பிரிக்க நாடான நைஜர் (Niger) இப்பட்டியலில் கடைசி இடத்தில் உள்ளது.

## *விருதுகள்*

| **விருதுகள் / பரிசுகள்** | **விருது பெறும் நபர் / அமைப்பு (Person/Organisation)** |
|---|---|
| ➢ **நட்புறவுக்கான விருது** (Friendship Medal) | சீன அரசானது தனது நாட்டின் மிக உயரிய விருதான 'நட்புறவுக்கான விருதினை' ரஷ்ய அதிபர் **விளாதிமிர் புதினுக்கு** வழங்கியுள்ளது. |
| ➢ **ராஜஸ்ரீ சாகு புரஸ்கார் விருது** (Rajashri Shahu Puraskar Award) | மகாராஷ்டிரா அரசினால் வழங்கப்படும் இவ்விருதானது சிறந்த அறிஞரும் சமூகச் செயற்பாட்டாளருமான **'புஷ்பா பாவே'** (Pushpa Bhave) அவர்களுக்கு வழங்கப்பட்டது. |
| ➢ **சர்வதேச உணவு விருது** 2018 (World Food Prize 2018) | **லாரன்சு ஹடாட்** (Dr.Lawrence Haddad) மற்றும் **டேவிட் நபாரோ** (Dr.David Nabarro) ஆகியோருக்கு உலக உணவு விருதானது வழங்கப்பட்டது. |
| ➢ **யோகாவினை மேம்படுத்துதல் மற்றும் பிரபலப்படுத்துதலில் சிறந்த பங்களிப்பை வழங்குவோருக்கான பிரதம அமைச்சரின் விருது.** | நாசிக் நகரைச் சேர்ந்த **விஸ்வாஸ் மண்டலிக்** (Vishwas Mandalik) என்பவருக்கும் மும்பையிலுள்ள யோகா நிறுவனத்துக்கும் (Yoga Institute) இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. |
| ➢ **சர்வதேச ஆற்றல் பரிசு** 2018 (Global Energy Prize 2018) | செர்கீ அலெக்சீன்கோ (Sergey Alexeenko) (Russia) மற்றும் மார்ட்டின் கிரீன் (Martin Green) (இவ்விருதைப் பெறும் முதலாவது ஆஸ்திரேலியர் மார்ட்டின் கிரீன் ஆவார்) |
| ➢ **இந்தியப் பொலிவுறு நகரங்களுக்கான விருது** 2018 (India Smart Cities Award - 2018) | இவ்விருதானது குஜராத்தின் சூரத் நகரத்துக்கு (Surat City) வழங்கப்பட்டது. |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ **பாலி உம்ரிகர் விருது** (Polly Umrigar Award) | 2017-18ம் ஆண்டுக்கான சிறந்த சர்வதேச கிரிக்கெட் வீரர் : **விராட் கோலி** |
| ➢ **பென் பின்டர் விருது 2018** (PEN Pinter prize 2018) | **சிமாமந்தா நிகோசி அடிச்சி** (Chimamanda Ngozi Adichie) |

## நியமனங்கள் மற்றும் ஆளுமைகள்

1) **பல்வேறு நாடுகளின் புதிய அதிபர்கள்/பிரதமர்கள் :**

| நாடு | அதிபர்/பிரதமர் |
|---|---|
| ➢ **கொலம்பியா** | இவான் டியூக் மார்க்கஸ் (Ivan Duque Marquez) - அதிபர் |
| ➢ **இத்தாலி** | கியுசெப்பே கான்டே (Giuseppe Conte) - பிரதமர் |
| ➢ **துருக்கி** | ரிசெப் தய்யிப் எர்டோகன் (Recep Tayyi Erdogan) அதிபர் |
| ➢ **ஸ்பெயின்** | பெட்ரோ சான்செஸ் (Pedro Sanchez) - பிரதமர் |

2) **மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் (Union Public Service Commission)** தற்காலிகத் தலைவராக **அரவிந்த் சக்சேனா** (Aravind Saxena) நியமிக்கப்பட்டுள்ளார்.

3) **மத்திய ஊழல் கண்காணிப்பு (Central Vigilance Commission)** அமைப்பின் ஊழல் கண்காணிப்பு ஆணையராக **'சரத்குமார்'** நியமிக்கப்பட்டுள்ளார்.

4) **சிக்கிம்** மாநிலத்தின் நல்லெண்ண தூதுவராக (Brand Ambassador) இசையமைப்பாளர் **A.R. ரஹ்மான்** நியமிக்கப்பட்டுள்ளார்.

5) **இந்தியாவின் முதல் பழங்குடியின இராணி : ஒடிசா மாநிலத்தை சேர்ந்த பல்லவி துருவா** (Pallavi Durua)

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

## புத்தகங்கள் & ஆசிரியர்கள்

1) "The Presidential Years" என்னும் நூலினை முன்னாள் இந்தியக் குடியரசுத் தலைவரான **பிரணாப் முகர்ஜி** எழுதியுள்ளார்.

2) 'President is Missing' என்ற புத்தகத்தினை முன்னாள் அமெரிக்க அதிபர் **பில் கிளின்டன் மற்றும் ஜேம்ஸ் பேட்டர்சன்** ஆகியோர் இணைந்து எழுதியுள்ளனர்.

3) "Notes of a Dream : The Authorized Biography of A.R.Rahman" என்ற புத்தகத்தினை **கிருஷ்ணா திரிலோக் (Krishna Trilok)** எழுதியுள்ளார்.

4) "Emergency : Indian Democracy's Darkest Hour" என்ற நூலினை **A.சூர்யா பிரகாஷ்** எழுதியுள்ளார்.

## விளையாட்டு

1) அதிக கோல்கள் அடித்த கால்பந்து வீரர்களின் தர வரிசையில், **லியோனல் மெஸ்ஸியின் சாதனையை இந்தியாவின் சுனில் சேத்ரி** (Sunil Chhetri) சமன் செய்துள்ளார். இருவரும் தலா 64 கோல்களை அடித்து தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ளனர். 81 கோல்களுடன் இப்பட்டியலில் **கிறிஸ்டியானா ரொனால்டோ** முதல் இடத்தில் உள்ளார்.

2) பேட்மிண்டன் விளையாட்டு வீரரான **'கிடாம்பி ஸ்ரீகாந்த்'** இந்த ஆண்டுக்கான இந்தியாவின் சிறந்த விளையாட்டு வீரராகத் (India's Sportsperson of the year) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

3) 12 வயதே நிரம்பிய R.பிரஞ்ஞானந்தா (R.Praggnanandhaa) என்னும் சிறுவன் இந்தியாவிலேயே **மிகவும் சிறு வயதில் செஸ் போட்டியில் கிராண்ட் மாஸ்டர்** பட்டத்தை வென்று சாதனை புரிந்துள்ளார். மேலும் இவர் கிராண்ட் மாஸ்டர் பட்டத்தை வெல்லும் உலகின் இரண்டாவது சிறுவயதுடைய (2nd Youngest grand master in the world) நபர் ஆவார். இத்தாலியில் நடைபெற்ற கிரிடைன் ஓபன் போட்டியில் (Gredine Open) வென்றதன் மூலம் இவர் இச்சாதனையைப் புரிந்துள்ளார்.

4) நியூயார்க்கில் உள் ஷின்னாகாக் மலைப்பகுதிகளில் உள்ள கோல்ஃப் மைதானத்தில் (Shinnecock Hills Golf Course) நடைபெற்ற அமெரிக்க ஓபன் கோல்ஃப் போட்டியில் (US Open title) அமெரிக்க கோல்ஃப் விளையாட்டு வீரர் ப்ரூக்ஸ் கோயப்கா (Brooks Koepka) சாம்பியன் பட்டம் வென்றார்.

5) கண்டங்களுக்கிடையிலான கால்பந்து கோப்பைத் தொடரில் (Inter continental cup football title - 2018) **இந்தியக் கால்பந்து அணி (கேப்டன் : சுனில் சேத்ரி)** சாம்பியன் பட்டம் வென்றது.

6) அமெரிக்காவின் உப்பு ஏரி நகரில் (Salt Lake City, USA) நடைபெற்ற **பெண்களுக்கான வில்வித்தைப் போட்டியில் (Women's recurve event)** இந்திய வில் வித்தை வீராங்கனையான **தீபிகா குமாரி தங்கப் பதக்கம்** வென்றார்.

7) **பிரெஞ்சு ஓப்பன் டென்னிஸ் : 2018 [மே 27 முதல் ஜூன் 10 வரை] ரோலண்ட் கேரோஸ் (Roland Garros), பாரிஸ்.**

| | |
|---|---|
| • ஆடவர் ஒற்றையர் (Men's Singles) | ரஃபேல் நடால் (வெற்றி) - ஸ்பெயின்<br>எதிர்<br>டொமினிக் தீம் (Dominic Thiem) - [ரஃபேல் நடாலுக்கு, இது 11வது பிரெஞ்சு ஓபன் பட்டமாகும். மேலும், இவர் இந்தப் பட்டத்துடன் சேர்த்து மொத்தம் 17 கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றுள்ளார்] |

| | |
|---|---|
| • பெண்கள் ஒற்றையர் (Women's Singles) | சிமோனா ஹாலெப் (Simona Halep) (வெற்றி) - ரோமானியா<br>எதிர்<br>சொலனே ஸ்டீபன்ஸ் (Solane Stephens) - அமெரிக்கா<br>(சிமோனா ஹாலெப்புக்கு இது முதலாவது கிராண்ட் ஸ்லாம் பட்டம் ஆகும்) |
| • ஆடவர் இரட்டையர் (Men's Doubles) | பியர் ஹியூக்ஸ் ஹெர்பர்ட் (Pierre - Hugues Herbert) (பிரான்சு) & நிக்கோலஸ் மகுத் (பிரான்சு) (வெற்றி)<br>எதிர்<br>ஆலிவர் மராச் (Oliver Marach) - ஆஸ்திரியா<br>& மேட் பாவிக் (Mate Pavic) - குரோஷியா |
| • மகளிர் இரட்டையர் (Women's Doubles) | பார்போரா கிரெஜ்சிகோவா (Barbora Krejcikova)<br>& காத்தரினா சினாய் கோவா (Katerina Sinaiakova) - - செக் குடியரசு (Czech)<br>(வெற்றி)<br>எதிர்<br>எரி ஹோசுமி (Eri Hozumi) &<br>மகோடா நினோமியா (Makoto Ninomiya) - ஜப்பான் |

8) **21வது FIFA (Fédération Internationale de Football Association) உலகக் கோப்பைக் கால்பந்து போட்டிகள் 2018 :** ரஷ்யா (ஜூன் 14 முதல் ஜூலை 15, 2018 வரை) - நான்காண்டுகளுக்கு ஒரு முறை

| | |
|---|---|
| ➢ போட்டிகள் நடைபெற்ற மொத்த இடங்கள் (Venues) மற்றும் நகரங்கள் (Cities) | 11 நகரங்களில் உள்ள 12 வெவ்வேறு இடங்களில் நடைபெற்றன. |
| ➢ தொடக்கப் போட்டி மற்றும் இறுதிப் போட்டிகள் நடைபெற்ற இடம் | லுஸ்னிகி மைதானம் (Luzhniki Stadium), மாஸ்கோ |
| ➢ பங்கு பெற்ற மொத்த அணிகளின் எண்ணிக்கை | 32 அணிகள் |
| ➢ நடைபெற்ற மொத்த போட்டிகளின் எண்ணிக்கை | 64 போட்டிகள் |
| ➢ போட்டித் தொடர் முழுவதிலும் அடிக்கப்பட்ட மொத்த கோல்களின் எண்ணிக்கை | 169 கோல்கள் |
| ➢ உலகக் கோப்பைக் கால்பந்துத் தொடரில் முதன் முதலாகப் பங்கு பெற்ற அணிகள் | ஐஸ்லாந்து மற்றும் பனாமா |
| ➢ கால்பந்துத் தொடரில் முதன் முதலாக நடைபெற்ற போட்டி | ரஷ்யா (வெற்றி) எதிர் சவுதி அரேபியா |

| | |
|---|---|
| ➢ முதலிடம் (Winner) (பிரான்சு - 4 கோல்கள் குரோஷியா - 2 கோல்கள்) | பிரான்சு (இரண்டாவது முறையாக கோப்பையை வென்றது மற்றும் 1998ல் பிரான்சு முதல் முறையாக கால்பந்து உலகக் கோப்பையை வென்றிருந்தது) [அணித்தலைவர் : ஹியுகோ லாரிஸ் (Hugo Lloris)] |
| ➢ இரண்டாம் இடம் (Runner) | குரோஷியா [அணித்தலைவர் : லுகா மாட்ரிக் (Luka Modric)] |
| ➢ மூன்றாம் இடம் | பெல்ஜியம் [அணித்தலைவர் : ஈடன் ஹசார்ட் (Eden Hazard)] |
| ➢ நான்காவது இடம் | இங்கிலாந்து [அணித்தலைவர் : ஹாரி கேன் (Harry Kane)] |
| ➢ கால்பந்து உலகக் கோப்பை வரலாற்றில் 2500-வது கோல் | பனாமாவுக்கு எதிரான ஆட்டத்தில் துனிசியாவைச் சேர்ந்த ஃபக்ரெத்தீன் பென் யூசுஃப் (Fakhreddine Ben Youssef) 2500-வது கோலினை அடித்தார். |
| ➢ அடிடாஸ் தங்கப் பந்து விருது (Adidas Golden Ball Award) (சிறந்த வீரருக்கான விருது) | லுகா மாட்ரிக் (Luka Modric) - குரோஷியா |
| ➢ அடிடாஸ் தங்கக் காலணி விருது (Adidas Golden Boot Award) | ஹாரி கேன் (Harry Kane) (அதிக கோல்கள் அடித்த வீரர்) - 6 கோல்கள் - இங்கிலாந்து |
| ➢ சிறந்த கோல் கீப்பருக்கு வழங்கப்படும் அடிடாஸ் தங்கக் கையுறை விருது (Adidas Golden Glove Award) | திபாத் கோர்டைஸ் (Thibaut Courtois) - பெல்ஜியம் |
| ➢ FIFA இளம் வீரருக்கான விருது (FIFA Young Player Award) | கிலியன் எம்பாப்பே (Kylian Mbappe) - பிரான்சு |
| ➢ FIFA நேர்மையான ஆட்டத்தை வெளிப்படுத்திய அணிக்கான விருது (FIFA Fair Play Trophy) | ஸ்பெயின் |
| ➢ இறுதிப் போட்டியில் ஆட்ட நாயகன் விருது பெற்றவர் (Man of the match in the Final) | ஆன்டோான் கிரீஸ்மேன் (Antoine Griezmann) - பிரான்சு |
| ➢ கால்பந்துப் போட்டிகளைப் பிரபலப்படுத்தக் கையாளப்பட்ட உத்தி (Branding) | இந்த உலகக் கோப்பைக் கால்பந்து தொடரின் சின்னமானது (tournament logo) 2014 அக்டோபர் 28 அன்று சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து (International Space Station) விண்வெளி வீரர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. |
| ➢ உலகக் கோப்பையை பிரபலப்படுத்துவதில் பயன்படுத்தப்பட்ட எழுத்துரு வகை [The Type face (Font) used for branding in the World Cup] | துஷா எழுத்துரு வகை (DUSHA Font) |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | |
|---|---|
| ➢ உலகக் கோப்பைப் போட்டியின் சின்னம் (Mascot for the Tournament) | சபிவாக்கா ஓநாய் (Wolf zabivaka) |
| ➢ போட்டித் தொடருக்கான அதிகாரப் பூர்வ பாடல் (Official Song) | “Live It up” என்னும் பாடல்; பாடலைப் பாடியவர்கள் வில் சுமித் நிக்கி ஜேம் மற்றும் இரா இஸ்த்ரெஃபி (Era Instrefi) |
| ➢ போட்டித் தொடரில் பயன்படுத்தப்பட்ட பந்து (Ball used in the Tournament) | அடிடாஸ் டெல்ஸ்டார் 18 (Adidas Telstar 18) |
| ➢ 2014-ல் கால் பந்து உலகக் கோப்பை போட்டி நடைபெற்ற இடம் (Previous World Cup 2014) | பிரேசில் (கோப்பையை வென்ற அணி : ஜெர்மனி எதிர் அர்ஜென்டினா) |
| ➢ அடுத்த (22வது) உலகக் கோப்பைத் தொடர் நடைபெறவிருக்கும் இடம் (2022) | கத்தார் (Qatar) |
| ➢ 2026ல் (23வது) உலகக் கோப்பை போட்டி நடைபெற இருக்கும் இடம் | அமெரிக்கா (USA), மெக்சிகோ மற்றும் கனடா ஆகியவை கூட்டாக இணைந்து 2026-ம் ஆண்டு கால்பந்து உலகக் கோப்பை போட்டியினை நடத்த உள்ளன. |
| ➢ 2018 ஃபிபா (FIFA) உலகக் கோப்பைப் போட்டித் தொடரின் முக்கியத்துவம் | ❖ இது 11வது முறையாக ஐரோப்பியக் கண்டத்தில் நடைபெறும் உலகக் கோப்பை கால்பந்துப் போட்டியாகும். மேலும் இதுவே கிழக்கு ஐரோப்பாவில் நடைபெறும் முதலாவது உலகக் கோப்பைக் கால்பந்து தொடராகும்.<br>❖ இந்த உலகக் கோப்பையை பிரான்சு வென்றதை அடுத்து, தொடர்ந்து நான்காவது முறையாக ஒரு ஐரோப்பிய அணியானது உலகக் கோப்பையை வென்றுள்ளது.<br>❖ இந்த உலகக் கோப்பைப் போட்டியில் தான் முதல் முறையாக காணொளிக் காட்சி உதவியுடன் கூடிய நடுவர் அமைப்புக்கான (Video Assistant Referee) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. |

9) **பெண்கள் கிரிக்கெட் :**

❖ இங்கிலாந்தில் நடைபெறும் கியா சூப்பர் டி 20 லீக் போட்டிகளில் (England’s Kia Super T20 League) பங்கு பெறும் முதல் இந்திய வீரர் **ஸ்மிரிதி மந்தனா** (Smriti Mandhana) ஆவார்.

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

- பெண்களுக்கான சர்வதேச டி20 கிரிக்கெட் போட்டிகளில் 2000 ரன்களுக்கு மேல் எடுத்த முதல் இந்திய பெண் கிரிக்கெட் வீரர் என்ற சாதனையை **மித்தாலி ராஜ்** (Mithali Raj) படைத்துள்ளார்.

- டப்ளினில் (Dublin) நடைபெற்ற அயர்லாந்துக்கு எதிரான ஆட்டத்தில் நியூசிலாந்தைச் சேர்ந்த **அமேலியா கெர்** (Amelia Kerr) 232* ரன்கள் எடுத்து புதிய உலக சாதனை படைத்துள்ளார்.

- ஏழாவது மகளிர் 20 ஓவர் ஆசியக் கிரிக்கெட் கோப்பை 2018-னை (Asia Cup Twenty - 20 Tournament 2018) **வங்கதேச பெண்கள் கிரிக்கெட் அணி** வென்றுள்ளது. இது மலேசியாவில் நடைபெற்றது. இப்போட்டித் தொடரின் சிறந்த வீரர் ஹர்மன் ப்ரீத் கவுர் (Harman preet Kaur) ஆவார். (இவர் 215 ரன்களை எடுத்துள்ளார்)

## *முக்கிய தினங்கள்*

| தினம் (Day) | நிகழ்வு (Events) | கருத்துரு/முக்கியத்துவம் (Themes / Significance) |
|---|---|---|
| ஜூன் 1 | உலக பால் தினம் (World Milk Day) | "Drive Move to Be Strong" |
| ஜூன் 1 | சர்வதேச பெற்றோர்கள் தினம் (Global Day of Parents) | 2012-ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் பொது அவையினால் (UN General Assembly) தீர்மானம் இயற்றப்பட்டு அதன் மூலம் உலகெங்கும் உள்ள பெற்றோர்களை பெருமைப்படுத்தும் விதத்தில் இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது. |
| ஜூன் 3 | உலக மிதிவண்டிகள் தினம் (World Bicycle Day) | முதன்முறையாகக் கொண்டாடப்படும் இந்த உலக மிதிவண்டிகள் தினமானது எளிய, மலிவான, நம்பத்தகு, தூய்மையான, சுற்றுச்சூழலுக்கு ஏற்ற வகையிலான போக்குவரத்தினை ஊக்குவிக்கிறது. |
| ஜூன் 5 | உலக சுற்றுச்சூழல் தினம் (World Environment Day) | "பிளாஸ்டிக் மாசுபாட்டை ஒழித்தல்" (Beat Plastic Pollution) |
| ஜூன் 8 | உலக மூளைக்கட்டி தினம் (World Brain Tumour Day) | இத்தினமானது முதன் முதலில் ஜெர்மன் மூளைக்கட்டி சங்கத்தினால் (German Brain Tumour Association) அனுசரிக்கப்பட்டது. மூளைக்கட்டியின் அறிகுறிகள், மேலாண்மை, சிகிச்சை உட்பட இந்நோயினைப் பற்றிய புரிதலை ஏற்படுத்துவதன் மூலம் மக்களிடையே |

| | | |
|---|---|---|
| | | மூளைக்கட்டி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இந்த தினம் உதவுகிறது. |
| ஜூன் 8 | உலக பெருங்கடல்கள் தினம் (World Oceans Day) | "பிளாஸ்டிக் மாசுபாட்டைத் தடுத்தல் மற்றும் ஆரோக்கியமான பெருங்கடலுக்கான தீர்வைகளை ஊக்குவித்தல்" (Preventing Plastic Pollution and encouraging Solutions for a healthy ocean) |
| ஜூன் 12 | உலக குழந்தைத் தொழிலாளர்களுக்கு எதிரான தினம் (World Day against child Labour) | "பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான தலைமுறை" (Generation Safe & Healthy) |
| ஜூன் 13 | சர்வதேச அல்பினிச நோய் விழிப்புணர்வு தினம் (International Albinism Awareness Day) | "உலகை நோக்கி நமது ஒளியை பிரகாசிக்கச் செய்வோம்" (Shining our light to the world) |
| ஜூன் 14 | உலக குருதிக் கொடையாளர் தினம் (World Blood Donor Day) | "எவருக்கேனும் உதவிடுங்கள். இரத்த தானம் செய்யுங்கள். வாழ்க்கையைப் பகிருங்கள்" (Be there for someone else. Give blood. Share life) |
| ஜூன் 15 | மூத்தோர்களை தவறாக நடத்தலுக்கான சர்வதேச தினம் (World Elder Abuse Awareness Day) | இத்தினமானது மூத்தோர்களை உடல் ரீதியாகிவும், மனரீதியாகவும், நிதியியல் ரீதியாகவும் தவறாக நடத்தும் பிரச்சினைகளுக்கு எதிராக உலகத்தின் கவனத்தை ஈர்ப்பததை நோக்கமாகக் கொண்டு அனுசரிக்கப்படுகிறது.<br>கருத்துரு :<br>"மனித உரிமைகள் அடிப்படையிலான அணுகுமுறைகளின் மூலமாக விழிப்புணர்விலிருந்து செயலை நோக்கி நகர்தல்"<br>("Moving from Awareness to Action through a Human Rights based approach) |
| ஜூன் 16 | வெளிநாடுகளில் இருந்து குடும்பத்திற்கு பணம் அனுப்புவதற்கான சர்வதேச தினம் (International Day of Family Remittances) | புலம் பெயர்ந்த தொழிலாளர்கள் தங்களுடைய பூர்வீக நாட்டின் நீடித்த வளர்ச்சிக்காவும், சொந்த நாட்டில் உள்ள தங்கள் குடும்பங்களின் நலனுக்காகவும் மேற்கொள்ளும் நிதிப் பங்களிப்பின் முக்கியத்துவத்துக்கு அங்கீகாரம் அளிப்பதற்காக இந்த தினமானது கொண்டாடப்படுகிறது. |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| ஜூன் 17 | பாலைவனமாதல் மற்றும் வறட்சியைக் கட்டுப்படுத்துவதற்கான சர்வதேச தினம் (World Day to Combat Desertification and Drought) | "நிலம் உண்மையான மதிப்பு கொண்டது - அதில் முதலீடு செய்யுங்கள்" (Land has true value - invest in it) |
| ஜூன் 18 | நீடித்த உணவியற் சமையற்கலைக்கான உலக தினம் (World Sustainable Gastronomy Day) | இத்தினமானது உணவியற் சமையற்கலையை (Gastronomy) உலகின் இயற்கை மற்றும் கலாச்சார பன்முகத்துவத்தோடு தொடர்புடைய பண்பாட்டு வெளிப்பாட்டினை அங்கீகரிக்கிறது. |
| ஜூன் 20 | உலக அகதிகள் தினம் (World Refugee Day) | "முன்னைப் காட்டிலும் தற்போது தான் நாம் அகதிகளுக்காக அதிகமான கவனத்தைச் செலுத்த வேண்டும்" (Now More Than Ever, We Need to Stand with Regugees) |
| ஜூன் 21 | நான்காவது சர்வதேச யோகா தினம் (International Yoga Day) | "அமைதிக்கான யோகா" (Yoga for Peace) |
| ஜூன் 21 | உலக நீர்நிலையியல் தினம் (World Hydrography Day) | "ஆழ்கடல் அளவியல் - நிலையான கடல்கள், பேராழிகள் மற்றும் நீர்வழித் தடங்களுக்கான அடித்தளம்" (Bathymetry - the foundation for sustainable seas, Oceans and Water ways) |
| ஜூன் 23 | ஐக்கிய நாடுகள் பொதுச் சேவை தினம் (United Nations Public Service Day) | அனைவருக்குமான சிறந்த உலகினைக் கட்டமைப்பதில், அரசுப் பணியாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் விலைமதிப்பற்ற பங்களிப்பினைப் போற்றும் வகையில் இந்தத் தினமானது கொண்டாடப்படுகிறது. |
| ஜூன் 23 | சர்வதேச ஒலிம்பிக் தினம் (International Olymic Day) | பிரான்ஸ் தலைநகர் பாரிசில் உள்ள சோர் போன்னேவில் (Sorbonne) 1894-ம் ஆண்டு ஜூன் 23ஆம் தேதி நவீன ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் தொடங்கியதை நினைவு கூறும் வகையில் 1948-ஆம் ஆண்டில் இருந்து சர்வதேச ஒலிம்பிக் தினமானது அனுசரிக்கப்படத் தொடங்கியது. |

SHANKAR IAS ACADEMY ZERO CURRENT AFFAIRS

| | | |
|---|---|---|
| ஜூன் 25 | மாலுமிகள் தினம் (Day of the Seafarer) | கருத்துரு : "மாலுமிகளின் நலன்" (Seafarers well being) இக்கருத்துருவானது மாலுமிகளின் நலன், குறிப்பாக மன நலம் சார்ந்த பிரச்சினைகளை உலகிற்கு உணர்த்த விழைகிறது. |
| ஜூன் 26 | மருந்து முறைகேடு மற்றும் சட்ட விரோத கடத்தலுக்கான சர்வதேச எதிர்ப்பு தினம் (International Day against Drug Abuse and Illicit Trafficking) | இந்தத் தினமானது சட்ட விரோதமாகப் பயன்படுத்தப்படும் மருந்துகளால் உலகளவில் ஏற்படும் பிரச்சினைகளைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் கொண்டாடப்படுகிறது. |
| ஜூன் 27 | ஐக்கிய நாடுகள் அமைப்பின் சிறு குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான (UN - MSME Day) தினம் (இது இரண்டாவது முறையாக கொண்டாடப்படுகிறது) | சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பல்வேறு பங்குதாரர்களுக்கிடையேயான உரையாடல் மற்றும் பங்குரிமையை ஊக்குவித்தல் மற்றும் அத்தகைய நிறுவனங்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையிலான புத்தாக்கம் (Innovation) மற்றும் அறிவுப் பகிர்வு ஆகியவற்றை ஊக்குவித்தல் என்பன இந்த தினத்தின் நோக்கங்களாகும். |
| ஜூன் 29 | 12வது தேசிய புள்ளியியல் தினம் (12th National Statistics Day) | "அலுவல் ரீதியிலான புள்ளியியல் விவரங்களின் தரத்தில் நம்பகத் தன்மையை மேம்படுத்துதல்" (Quality Assurance in Official Statistics) |

SHANKAR IAS ACADEMY
ZERO CURRENT AFFAIRS